gistered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 4

ACC-NO-34337

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

லர் 38 | விசுவாவசு சித்திரை 1965 ஏப்ரல் | இதழ் 4

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

நம் சமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டம் 24—4—65 மாலை 4 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் நிகழும். தக்க நிறைவெண் இல்லையெனில் மறுநாள் 25—4—65 காலை 9-30 மணிக்கு வந்தவர்களைக் கொண்டு கூட்டம் நடத்தப் பெறும். ஆங்கிலப் பத்திரிகை நடத்துவது பற்றிக் கூட்டத்தில் விதியைமாற்றிமுடிவு செய்ய வேண்டுவது அவசியமாதலின்உறுப்பினர்கள்யாவரும் தவறுதுவருமாறுகேட்டுக் கொள்கின்றேன். (செயலாளர்.)

நம் சமாஜத்தின் சார்பில் காரைக்காலம்மையார் திருநாள் 28—3—65 ஞாயிறு மாலை 6-மணிக்கு மயிலாப்பூர் ஸ்ரீ வெள்ளீசுரர் தேவாலயத்தில் அவ்வாலய அறங்காவலர் திரு. எஸ். பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. திருமதி. காஞ்சனமாலையம்மையார் அவர்கள் ' காரைக்காலம்மையார்'' பற்றி விரிவுரையாற்றினார்கள். சமாஜச் செயலாளர் வரவேற்புரையும்திரு. மா. ப. தியாகராய முதலியார் அவர்கள் நன்றியுரையும் நவின்றார்கள்.

நம் சமாஜத்திற்கு 1965 க்குரிய சந்தாவை அனுப்பாதவர்களுக்கு ஞாபகம் செய்வதற்காகத் தனி அஞ்சற் கார்டுகள் அனுப்பப்பெற்றுள்ளன. அவற்றைக் கண்டதுமாவது நினைவு கூர்ந்து சந்தாவைச் செயலாளர் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகிறோம்.

செயலாளர்,

சைவ சித்தாந்த மகாசமாஜம்
12, கிழக்கு மாடவீதி,
மயிலாப்பூர், சென்னை-4.

இம்மாதம் திரு. K. சிங்காரவேலு அவர்கள் (V. M., கடத்தூர் அஞ்சல்,சேலம் மாவட்டம்) திரு.இரா. குணசீலன் அவர்களை (151, கடைவீதி, தர்மபுரி-2 சேலம் மாவட்டம்) ஆயுள் உறுப்பினராகவும் மேலும் ஐவரை சாதாரண உறுப்பினர்களாகவும் சேர்த்துதவினார்கள். அவர்களுக்கு நம் நன்றி.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர் 38 | விசுவாவசு சித்திரை 1965 ஏப்ரல் | இதழ் 4

திருவாசகம் – தக்கயாக சங்காரம்

(ஆசிரியர்)

—★—

திருவாசகத்துள் மிகவும் அதிகமாய்க் குறிப்பிடப் பட்டுள்ள சிவபராக்கிரமக்கதை, தக்கயாக சங்காரமாகும். திருவுந்தியார் 19 பாடல்களுள் முதல் நான்கு பாடல்களில் திரிபுரசங்காரமும், அடுத்த பன்னிரண்டு பாடல்களில் தக்கயாக சங்காரமும் சொல்லப்பட்டுள்ளன. வேறு பல இடங்களிலும் பலவான செய்திகள் வருகின்றன. தக்கன், திருமால், அங்கி, இந்திரன், பகன், நாமகள், பிரமன், சந்திரன், சூரியன் முதலானோர் தண்டிக்கப் பெற்ற செய்தி சொல்லப்பட்டுள்ளது. இவற்றுள் ஐந்திடங்களில் மாணிக்கவாசகர் எச்சனைக் குறிப்பிடுகிறார். அவை பின் வருவன.

சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலையரிந்து

—திருவம்மானை 15

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கெனவந் தமர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கெனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ

—திருச்சாழல் 5

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கன் எச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரரால்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ

பங்கமில் தக்கனும் எச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ

—திருப்பூவல்லி 4, 11

சோமன் கலைதலை தக்கனையும் எச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ.

—தோணோக்கம்

இவ்விடங்களில் எச்சன் என்ற சொல் யாரைக் குறிப்பிடுகிறது என்பது பலரும் இன்னும் தெளிவாக விளங்கக் கூறவில்லை. மேலே கூறியுள்ள மேற்கோட் பகுதிகளில் அம்மானையில் "தக்கன் வேள்வியில் எச்சன் தலையரிந்து என்று வருகிறது. ஏனைய நான்கிடங்களிலும் "தக்கனும் எச்சனும்" என்று சேர்ந்தே வருகிறது. திருச்சாழல் பாட்டில் மட்டும் "தக்கனையும் எச்சனையும் தலையறுத்து, எச்சனுக்கு மிகைத்தலையருளினன்" என்று காணப்படுகிறது. இவற்றால் நாம் உணரவேண்டுவது முதலாவதாக தக்கன் வேறு, எச்சன் வேறு என்பது.

இனி, எச்சன் என்ற சொல்லை உரைகாரர்கள் எவ்வாறு பொருள் செய்தார்கள் என்று பார்க்கலாம். 'எச்சன்

யாகத்துக்கு அதிதேவதை'' என்பது வாசுதேவ முதலியார் உரைப் பதிப்பு. இதை ஒட்டியே பின் வந்த உரைகாரர்களான அருணகிரி முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, நவநீதகிருஷ்ண பாரதியார் போன்றூர் அனைவரும், யாகத் தலைவன், எக்ஞபுருஷன், வேள்வித்தலைவன் என்று பொருள் எழுதினுர்கள். எனினும், இப்பொருள்களில் நிரம்ப வேறுபாடு உண்டு. எச்சன் என்ற சொல் யக்ஞ என்ற வடசொல்லிலிருந்து வந்தது. இது யாகத்தை நடத்தி வைக்கும் தலைவனைக் குறிக்காது யாகத்தின் அதிதேவதையைக் குறிக்கும்.

தக்கயாகம் சம்பந்தமாக மூன்று தலைவர்களை நாம் இங்கு கருதுதல் வேண்டும். முதலாவது யாகத்தை நடத்தி வைப்பவன், அல்லது யாககர்த்தா, எஜமானன் ஆகிய தக்கன். இரண்டாவது யாகத்துக்கு அதிதேவதையாக இருந்து பூசை ஏற்றுக்கொள்பவன் இவனே யக்ஞபுருஷன் எச்சன். சகல யக்ஞத்திற்கும் பிரதான அதிதேவதையாகிய சிவபெருமானை மறந்தும், புறக்கணித்தும், அவமதித்தும் பெருமானுடைய ஸ்தானத்தில் திருமாலை அதிதேவதையாக வைத்துத் தக்கன் யாகத்தை நடத்தினுன். தன் புதல்வியும், சிவபெருமான் தேவியும் ஆகிய தாட்சாயணியை அவன் அவமதித்து இவ்வாறு செய்ததன் விளைவே தக்கயாக சங்காரம். எனவே, இங்கு தக்கன் எச்சனுக வேண்டிய சிவபெருமானை ஒதுக்கித் திருமாலை எச்சனுகக்கொண்டிருந்தான். திருமாலே இரண்டாவது தலைவன். இனி யாகத்தில் குருவாக இருந்து யாகத்தை நடத்தி வைத்தவன் பிரம்மன்; இவன் மூன்ருவது தலைவன்.

இந்த நிலையை உணராது உரைகாரர்கள் பலரும் முறை பிறழ்ந்து ஒருவரை மற்ருெருவராகக் கொண்டமையால், விபரீதமான உரைகள் ஏற்பட்டன. எச்சன் திருமாலாவான் என்பது புராணங்கள் கூறும் கதை. சிவபெருமானை விட்டுத் திருமாலை எச்சனுகக் கொண்டதற்காகத் ததீசி முனிவர் தக்கனைச் சினந்து சாபம் கொடுக்கிருர். இச்செய்தி கந்த புராணம், காசி காண்டம், காஞ்சிப்புராணம் முதலான பல நூல்களில் கண்ட செய்தி ''எச்சனும் துளவினுன்'' ''அச்சுதன் அருளால்

வேள்வி தொடங்கலும்" என்பன காஞ்சிப் புராணம் தக்கேசப்படலம் 29-ஆம் செய்யுள். "எச்சன்-தக்கன்" என்று தருமபுரம் பதிப்பு முதலியவற்றுள் எழுதியிருப்பது பிழை எச்சன்-யாக அதிதேவதை" என்று மட்டும் கூறி திருமாலே எச்சனுவான் என்பதை உரைகாரர் பலர் கூறவில்லை.

திருச்சாழல் 5-ஆம் பாட்டில் எச்சன் என்ற சொல் இரண்டு இடங்களில் வருகிறது. இது பொருள் செய்வதில் பலருக்கும் மிகுந்த மயக்கத்தைத் தந்திருக்கிறது. முதல் வரியில் "வேள்வி இயற்றும் குரு" என்றும் நான்காம் வரியில் "தக்கன்" என்றும் அவர்கள் பொருள் எழுதியிருக்கிறார்கள். முதன் முதலாக, வாசுதேவ முதலியார். "எச்சன் என்பதற்கு" யாகத்துக்கு அதிதேவதை என்றும், யாகத்தைச் செய்கிறவன் என்றும் பொருள்படுதலால், முதலடியிலுள்ள எச்சன் என்பதற்கு யாகத்துக்கு அதிதேவதையென்றும், நான்காமடியிலுள்ள எச்சன் என்பதற்கு யாக கர்த்தாவாகிய தக்கன் என்றும் பொருளுரைக்கலாயிற்று" என்று எழுதினர். இதையே பின் வந்த அனைவரும் கொண்டிருக்கிறார்கள். எச்சன் என்ற ஒரே சொல்லுக்கு ஒரே பாட்டில் இருவேறு பொருள் கொண்டமை பொருந்தாது என்பது வெளிப்படை. ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த டாக்டர் போப், எச்சன் என்பது திருமாலாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். (எனினும் பின் வந்தோர் இவ்வாங்கிலேயருக்கு விளக்கமான கருத்தைக்கூட கருதிப் பார்க்கவில்லை.) ஆனால் இவரும் நான்காம் வரியில் எச்சன் தக்கனே என்கிறார். சென்ற நூற்றுண்டில் உரை கண்ட காழித்தாண்டவ ராயர் கூட "எச்சன் யாகத் தலைவன்" என்றுமட்டும் கூறினரேயன்றி இவன் திருமால் என்று சொல்லவில்லை. எச்சன் என்பது ஒரு தேவன் பெயரன்று; ஒரு பதவியின் பெயர் என்பதை நாம் உணரவேண்டும்.

யாகத்தில் இம்மூன்று தலைவர்களுடைய தலையும் அறுப்புண்ட செய்தி திருவாசகம் கூறுகிறது. இது பின்னர் விளக்கப் பெறும். திருமால் தலை தக்கயாகத்தில் அறுப்புண்டது என்ற செய்தியை உரைகாரர் அனைவரும்

அறியாமையினுலோ, அல்லது மறந்ததனுலோ, எச்சன் திருமால் என்று குறிப்பிடவில்லை.

இனி தக்கயாகம் சம்பந்தமாக வேறு இரண்டு இடங்கள் பலருக்கும் தெளிவுபடாமல் உள்ளன. ஒன்று ''வியாத்திரனுர்'' என்ற சொல்லாட்சி. மற்றது சிரம் மூன்று அறுத்த செய்தி,

வெஞ்சின வேள்வி வியாத்திர னுர்தலை
துஞ்சின வாபாடி உந்திபற
தொடர்ந்த பிறப்பற உந்திபற.

என்பது திருவுந்தியார் பத்தாம் பாடல். இங்கு வியாத்திரனுர் என்பதன் பொருள் தெளிவுபடாமல் உள்ளது. வாசுதேவ முதலியார் ''யாகத்துக்கு அதிதேவதையான எச்சன்'' என்றே எழுதிவிட்டார். காழித் தாண்டவராயர் வேள்வி நாயகன் என்று சொன்னுர். அதிதேவதையான எச்சன் என்றே சுப்பிரமணியபிள்ளை முதலிய பலர் எழுதியிருக்கிருர்கள். யாகம் செய்வோன் என்று போப் எழுதுகிருர். நவநீத கிருஷ்ண பாரதியார் ''எச்சன் இருத்துவிக்குகள் என்னும் இவர்களுடைய தலைவன்'' என்று கூறுகிருர். ''த்ரு என்பது வடமொழிக் கண்ணே பிடித்திரு முதலான பல பொருளுடைய ஒரு வேர்ச் சொல். இது வி, ஆ என்னும் உப சர்க்கங்களோடு கூடி வ்யாத்திரு, வியாத்திரன் என்று ஆயிற்று. இதன் பொருள் தாங்குவோன்'' என்று அவர் கூறுகிருர். இது அறிஞர் ஆராய்ந்து முடிவு செய்யத் தக்கது. இக்கருத்து, எளிமையாகப் பொருள் சொல்ல வேண்டிய விடத்து மிக்கசிக்கலை விளைவிக்கிறது. அன்றியும், மேல் வரும் ''சிர மூன்றை'' என்ற தொடருக்குப் பொருள் கூறவேண்டிய காரணத்தால், வேள்வி என்பது எச்சன், வியாத்திரனுர் என்பது இருத்துவிக்குகள் என இவர் கருதுகிருர். இது வலிந்து கொள்ளும் கருத்து.

''வேள்வி வியாத்திரனுர்'' என்பதை ஒரு தொடராகவே கொண்டு பொருள் செய்தல்வேண்டும். வியாத்திரனுர் என்ற பெயர், வேள்விக்குக் குரு, வேள்வியை இருந்து நடத்துபவர் என்றே பொருள்படும். இது வ்யாப்ருத

என்ற வடசொல்லின் திரிபு. வேள்வியை இருந்து நடத்துபவன் இங்கு வேள்விக்குக் குருவாகிய பிரமன். இனி சிரம் மூன்று அறுத்த செய்தியை திருப்பூவல்லி ஆறும் பாடலில் கூறுகிறார்.

எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் திருப்புருவம் நெரித்தருளி
உருமூன்று மாகி உணர்வரிதாம் ஒருவனுமே
புரமூன்று எரித்தவா பூவல்லி கொய்யாமோ.

இப்பாடலின் பொருள் நன்கு விளங்கவில்லை'' என்று வாசுதேவ முதலியார் எழுதினர். ''திரிபுரர்களின் சிரமற'' என்பது காழித்தாண்டவராயர் உரை. முருகேசமுதலியார் ராமசாமி முதலியார் ஆகியோர் ''மூன்று தலைகளும் இற்று விழச் செய்து'' என்று மட்டும் எழுதி விளக்காமல் விட்டார்கள். தக்கன், எச்சன், இந்திரன் என்பவர்கள் தலை அற்று விழும்படி கோபம் கொண்டு புருவம் நெரித்தருளி வீரபத்திரரால் அவர்களைக் கொன்றும்'' என்பது கா. சுப்பிரமணிய பிள்ளை உரை.

"எச்சன், தக்கன், வியாத்திரன் என்னும் மூவருடைய தலைகளும் அறுமாறு அழகிய புருவங்களை நெரித்தருளிச் செய்து'' என்பது ந. பாரதியார் உரை; இராமநாத பிள்ளையும் இதையே கூறுவர். "தக்கன், எச்சன். எச்சத்தொழில் நடத்துவோன் ஆகிய மூவரையும் இனமிக்கவராய்த் தலையறுத்து மாற்றுவித்து...''

''சிரமூன்று அறத்தன் திருப்புருவம் நெரித்தருளி'' என்ற தொடரை அப்படியே எடுத்துத் திரு மாளிகைத் தேவர், முதலாவது கோயில் திருவிசைப்பாவில் உபயோகித்திருக்கிறார்.

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்க விண் டுருள ஒண்திருப் புருவம்
நெரித்தரு ளியஉருத் திரனே!

என்பது பாட்டு ஒன்பது. இப்பாடலால் திருவாசகப் பாடலின் கருத்துத் தெளிவுபடும். தக்கன், எச்சன், வியாத்

திரன் என்ற மூவரும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இம் மூவரும் முறையே தக்கனும், திருமாலும், பிரமனும் ஆவர். திருமாலும் பிரமனும் தக்கயாகத்தில் சிரமறுப் புண்ட செய்தியை உந்தியார் பாடல்கள் 6, 13, 14 குறிப் பிடும். எனவே சிரமூன்றற என்ற தொடருக்கு தக்கன், திருமால் ஆகிய மூவர் சிரமற' என்பதே நேரிதான பொருளாகின்றது.

'சிரமூன்றற' என்பதற்குத் திரிபுராதியர் மூவர் சிரம் அற என்று பொருள் கூறவும் கேட்டிருக்கின்றோம். இதே பாடல் நான்காம் அடியில் புரம் மூன்று எரித்தமை கூறப் பட்டுள்ளபடியால், இரண்டாம் அடியிலும் அச்செயலே கருதப்பட்டதென்பது பொருந்தாது. மேலும், புரம்மூன்று எரித்தமை தான் புராணத்தில் கண்ட செய்தியேயன்றி, தாரகாக்ஷன் முதலான திரிபுராதியர் தலையறுபட்டனர், என்ற செய்தி புராணத்துள் எங்கும் சொல்லப்பெற வில்லை.

இனி தக்க யாகத்தில் திருமால் சிரம் அறுப்புண்ட செய்தியைத் தக்க யாகப் பரணி மிகவும் சுவைபடக் கூறு கின்றது. திருமால் யக்ஞ மூர்த்தியாக யாகத்தில் புகுந்து சிரமறுப்புண்டது ஒன்று; அவிசை ஏற்று அப்போது தேவர்களோடு தாமும் ஒரு தேவராக இருந்து சிரமறுப் புண்டது இரண்டு; வீரபத்திரர் முன் எதிர்த்து நின்று பொருது மார்பில் அடிபட்டு வீழ்ந்தது மூன்று; ஆக மும் முறை திருமால் ஒருவரே சிரம் அறுப்புண்டார்; பரணி; கடை திறப்பு. பாடல் 46.

> "புக்கா வுதிகள் பலஏற்றும் போரில் ஏற்றும் சிரமொருவர்
> முக்கால் இழந்த கதைபாட மூரிக் கபாடந் திறமினோ

என்பது தக்கனுடைய யக்கியத்தில் அக்கினி கோத்திர ஔபாசன யக்கியாகுதியை உண்கைக்கு யக்கியமூர்த்தி யாய்ப் புகுந்தும், சகத்திர தாரையாய அவிர்ப்பாக அவிசை ஏற்றுக்கொண்டருளியும், ஈசுவரனெதிரே நின்று பொருதும், ஒருவரெனப்பட்ட விட்டுணு தேவர் தமது தலையை மூன்று விசை இழந்தருளிய புராணக் கதை பாடப் பெரிய கதவுகளைத் திறமின்.

மூரி—பெருமை; ஒருவர் ஒரு தலையை முக்காலிழந்தது விசேடமென உணர்க.

தக்க யாகப்பரணி 12-ஆம் நூற்றுண்டில் ஒட்டக்கூத்தர் பாடியது. விஷ்ணுக்கள் பலர்; பிரமர்கள் பலர் என்பது புராணக்கதையாதலால், ஒருவனே எவ்வாறு மும்முறை தலையறுப்புண்ண முடியும் என்று மயங்க இடமிராது. தக்க யாகத்தில் சூரியருள் ஒருவனுன பகனின் கண்ணைப் பறித்ததும், மற்றொரு சூரியனுன பூடாவின் தொண்டை வாயினிற் பற்களை நெரித்ததும், ஆக சூரியர் இருவரை உந்தியார் கூறுவதும் இங்குக் கருதத்தக்கது.

திருச்சாழல் 5-ஆம் பாடலில் "எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினன் காண் சாழலோ" என்ற வரியை முன்னமே பார்த்தோம். எச்சன் திருமால் என்பதையும் விளக்கினேம். பரணியில் கூறியவாறு எச்சனுக வந்த திருமால் மூன்று முறை தலையை இழந்தார். பின்னர் தேவர் வேண்டுகோளுக்கிணங்கி சிவபிரான் இறந்தோரை எழுப்பி தக்கனுக்கு ஆட்டுத் தலை தந்து யாகம் நடத்த அனுமதித்தபோது திருமாலுக்கு மீண்டுமொரு தலையை அளித்தார். இதுவே இங்குக் கூறும் "மிகைத்தலை" என்று கருதலாம். உரைகளில் கூறியபடி சிலர் மான் உருவோடு ஓடிய திருமாலுக்கு மீண்டும் பெருமான் மான் தலையாகிய மிகைத்தலையை அளித்தார் என்று எண்ணவேண்டிய தில்லை. வரலாறுகளும் இவ்வாறு குறிப்பிடவில்லை. "மிகைத்தலை" என்று தொழிற்பெயராகக் கொண்டு "இத்தலை குற்ற அடையாளக் குறி" என்று சிலர் பொருள் எழுதியுள்ளனர். அவ்வாறு கொள்ளவும் அவசியமில்லை.

தேவாரத்துள் தக்கயாக சங்காரம் பல இடங்களில் சுட்டப்பட்டுள்ளது. சம்பந்தர் திருமுதுகுன்றத் தேவாரத் தில் (1, 131, 3)

தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்
திரன் எச்சன் அருக்கன் அங்கி
மிக்கவிதா தாவினெடும் விதிவழியே
தண்டித்த விமலர் கோயில்—

என்று தக்கன், எச்சன் விதாதா மூவரையும் குறிப்பிடுகிறார். விதாதா—பிரமன், திருக்கழுமலப்பதிகத்தில் (3, 118, 5.) சுருதியான் தலை அறுத்தது கூறுகின்றார், சுருதியான்—பிரமன். எச்சன் தலை கொண்ட செய்தியை அப்பர் பல இடங்களில் கூறுகிறார். (6, 26, 3.)—(6, 88, 2; 6, 96, 9; 6, 52, 9.) திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில் (6 53, 4) "தக்கனைச் சிதைத்தார், திசைமுகன் தன் சிரமொன்று சிதைத்தார், மெய்வேள்வி மூர்த்தி தலையறுத்தார்" என்கிறார். வேள்விமூர்த்தி இங்கு எச்சனாகிய திருமால். சிராப்பள்ளிக் குறுந்தொகையில் (5, 8, 5.) "அரி, அயன் தலை வெட்டி வாட்டினார்,". என்று இருவர் சிரமறுத்ததையும் கூறுகிறார். தக்க யாக சங்காரத்தைக் கூறுகின்ற திருமழபாடி திருத்தாண்டகத்துள் (6, 40, 5)

சிரமேற்ற நான்முகன்தன் தலையும் மற்றைத்
திருமால்தன் செழுந்தலையும் பொருந்தச் சிந்தி
உரமேற்ற இரவிபல் தகர்த்துச் சோமன்
ஒளிர் தலைகள் படஉழக்கி உயிரைநல்கி.

என்று கூறுகிறார். தக்கன் வேள்வியில் பிரமன் தலை கொண்டதை "விதாதாவின் தலைகொண்ட சென்டர்" (2, 52, 3,) என்று பாடுகின்றார்.

இனி, வியாத்திரன் என்ற சொல்லையே அப்பர் சுவாமிகள் உபயோகிக்கிறார். 'எச்சன் நிணத்தலை கொண்டார்... மெச்சன் வியாத்திரன் தலையும் வேறாக்கொண்டார்,' என்பது திருத்தாண்டகம் (6, 96, 9) இவ்வாறு இங்குக் காட்டிய தேவாரத் தொடர்கள் முன்னமே கூறிய கருத்துக்களுக்கு அரண் செய்வன வாயுள்ளன.

இதுகாறும் கூறியவற்றால், எச்சன்=திருமால், மிகைத்தலை என்பது மேலும் அளிக்கப்பெற்ற தலை; வியாத்திரன்—பிரமன், சிரமூன்றுமற்றது யாகத்துக்குரியவர்களான தக்கன், எச்சன். வியாத்திரன் ஆகிய மூவருக்கும் என்ற பொருள்கள் தெளிவாகும்.

திருவாலங்காடு (சோழநாடு)

(மு. அ.)

இடம்: காரைக்கால் அம்மையார் சரித்திரத்தால் புகழ்பெற்ற திருவாலங்காடு சென்னையினின்று அரக்கோணம் செல்லும் பாதையில் உள்ளது, அவ்வூர் வேறு. இவ்வூரோ தஞ்சாவூர் ஜில்லாவில் குத்தாலத்திற்கு மேற்கே கும்பகோணம் செல்லும் பஸ் பாதையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. நாரசிங்கம்பேட்டை ரயிலடியிலிருந்து இரண்டு மைல் தொலைவு. கோயில் பஸ் பாதைக்குத் தெற்கே சில கஜதூரம்; காவேரியின் தென் கரை.

பெயர்: திருவாலங்காடு வடவாரண்யம்; சுவாமி வடவாரண்யேசுவரர். அம்பிகை, வண்டார் குழலம்மை, பிரமரஅளகாம்பிகை, ஸ்தலவிருட்சம் ஆல் போலும்.

கோயில்: மேற்கு பார்த்த சந்நிதி. முதல் வாயிலின் பின் தனியான சிறு கோபுர வாயில். கருங்கற்கோயில், சுத்தமான நிலையில் உள்ளது. உள்மதில் பெரியது. கோபுரம் கடந்தவுடன் உள்ளே தென்புரம் புத்திர காமேஷ்ட தீர்த்தம் என்ற திருக்குளம் பாசி நிரம்பியது. முன்னதாகத் தெற்கு நோக்கி அம்பாள் கோயில் உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. வட பிரகாரத்தில் ஈசானிய திக்கில் மேற்கு பார்த்த புத்திர காமேசுவரி கோயில் தனியே உள்ளது.

மூர்த்தி: சுவாமிக்கு இடப்புறத்தில் ஆறுமுகர் கோயில் மேற்கு நோக்கி பன்னிரு கைகளோடு கூடிய அழகான மூர்த்தி. மயிலும் அழகானது. மயிலும் திருவாசிகையும் முருகனோடு சேர்ந்து ஒரே கல்லில் அமைக்கப்பட்டுள்ளன. கஜலட்சுமி பெரிய உருவம். நடராஜமூர்த்தி திருத்தமான நடுத்தர உருவம். பழைய அம்பாள் திருவுருவம் ஒன்று தனியே காணப்பெறுகிறது. இந்த உருவங்கள் காவேரி நடுவில் கிடந்தது என்றும், அம்பாள் அர்ச்சகர் கனவில் வந்து சொல்லிய பிறகு இங்கு எடுத்து வைத்தார்கள் என்றும் சொல்வர். வடபுறம் திட்டி வாயி

வின் பக்கத்தில் சங்கு சக்கர தாரிணியான விஷ்ணு துர்க்கை கிழக்கை நோக்கி சிம்மவாகனத்தோடு; மஹிஷா சுரன் இல்லை. இவ்வூரில் மற்றொரு கோயில் இருந்து அது கிலமாகி அங்கிருந்த பலமூர்த்திகள் இங்குக் கொண்டுவைக் கப்பட்டன என்று மக்கள் சொல்வர். பிராகாரத்தில் இவை தனியே உள்ளன. அர்த்தநாரீசுவரர், வேறு பல லிங்கங் கள், வேறு தட்சிணாமூர்த்தி; அம்பிகையோடு கூடிய பெரிய மகாலிங்கம், பெரிய பைரவர், காளி, சூரியன், சண்டிகேசுவரர், தனி பிரம்ம விஷ்ணுகளோடு கூடிய லிங்கோத்பவர், வேறு தனி அம்பிகை, தனி ரிஷபாருட மூர்த்தி, அறுபத்து மூவர் முதலான பல உருவங்கள். இவற்றுள் ஓர் உருவம் தாடியோடு கூடிய அரச கோலத் தில் தலையில் பாதுகை தாங்கியுள்ளது. மூர்த்தியார் போலும். தென் பிராகாரத்தில் அகத்தியர், எமன், சுரஹரேசுவரர்; பரவை, சங்கிலியாரோடுகூடிய சுந்தரர்— இவர் பெரிய உருவம், உச்சியில் கொண்டை முடித்திருக் கிறார். சம்பந்தர் அப்பர் பெரிய உருவங்கள்; தேவியரோடு கூடிய சிறிது பின்னமான சுப்பிரமணியர் தனியே உள் ளார். வேறு பைரவர், சூரியன், நர்த்தன கணபதி, இரட்டை விநாயகர், வாயில் மருங்கில் துவார பாலகர். உற்சவ மூர்த்திகள் அனைவரும் உள்ளனர். சிறப்பாக சோமாஸ்கந்தர் மிக்க சிறப்புடைய வடிவம்.

வரலாறு: புத்திரப் பேறில்லாதவர்கள் இங்குள்ள புத்திர காமேசுவரத் தீர்த்தத்திலோ காவேரியிலோ, மூழ்கி ஒரு குடம் தீர்த்தம் கொண்டு வந்து குருக்களிடம் கொடுத்து புத்திர காமேசுவர மூர்த்திக்கு அபிஷேகம் செய்வித்தால் புத்திரப் பேறு உண்டாகும் என்பது இவ் வூரார் அனுபவம். இரண்டு பருந்துகள் இங்கு பறந்து வந்து இறக்கை ஒடிந்து விடவே, இறைவன் அவற்றைக் காத்து முத்தி அளித்தான் என்று சொல்லுவர். இது காரணத்தால் இங்கு யாரும் கிளி வளர்ப்பதில்லை. கிளி தங்குவதில்லை என்று சொல்லுகிறார்கள்.

விழா; இவ்வூர் கஞ்சனூர் சப்த க்ஷேத்திரங்களில் ஒன்று. விழாவின்போது ஹரதத்தர் இங்கு வருவதுண்டு.

நிர்வாகம்: திருவாவடுதுறை ஆதினத்தாரின் நிர் வாகம்; கோயில் எங்குமே ஒழுக்கு; திருப்பணி தேவை.

பாடல்: இல்லை

கல் வெட்டு: பழைய கல்வெட்டுகள் நிரம்ப உள்ளன. கிழக்கு மண்டபச் சுவர்களிலும், கீழேயும் பழமையான கல்வெட்டுகள். நிரம்பப் பல இடங்களில் கால கதியினல் கல்பொரிந்து போய்ச் சாசனங்கள் அழிந்து போயின.

சிறப்பு; ஊருக்கு வெளியே தனி ஈசான விநாயகர் கோயில்; கோயிலின் வடக்கு வீதியே நெடுஞ்சாலை.

'சைவ சித்தாந்தம்'' ஆங்கில இதழ்,

சென்ற மாத சித்தாந்த இதழில் ''சைவ சித்தாந்தம்'' என்ற பெயரில் ஒரு முத்திங்கள் ஆங்கில இதழ் சமாஜச் சார்பில் தொடக்கப்பெறும் என்பதாகத் தெரிவித்து அன்பர்கள் அதற்கு ஆண்டுச் சந்தா ரூ 5. அனுப்பி உறுப்பினர்களாகக் கேட்டுக் கொண்டிருந்தோம். அன்பர்கள் உறுப்பினர்களாகச் சேரும் வகையில் தொகையைச் செலுத்தி வருகிறர்கள். மிகச்சிறந்த நம் சித்தாந்த சாத்திரத்தை உலகம் போற்றச் செய்வதற்கு ஆங்கில இதழ் இன்றியமையாச் சாதனமாகும். ஆகையால் பெருமக்கள் மிகுந்த எண்ணிக்கையில் இம்மாத இறுதிக்குள் ஆங்கில இதழிற்கு உறுப்பினர்களாகி, மற்றவர்களையும் உறுப்பினர்களாகச் செய்து தங்கள் ஆதரவைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேம்.

சமாஜ மணி விழா மலர்

நிகழவிருக்கும் சமாஜ மணி விழாவில் மணி விழா மலர் ஒன்று வெளியிடப்பெறும். இம் மலரில் அரிய கட்டுரைகளும், சமாஜத் தொண்டர்களின் வாழ்க்கைக் குறிப்பும், சைவ சித்தாந்த நூல்களின் அட்டவணையும் பிறவும் இடம்பெறும். அறிஞர்கள் மலரில் வெளியிடச் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியனுப்ப வேண்டுகிறேம். கட்டுரைகள் அனைத்தையும் காலம் தாழ்த்தாமல் மலரின் அளவிற்கு ஏற்றபடி 1965 ஆகஸ்டு முதல் தேதிக்குள் அனுப்ப விண்ணப்பிக்கிறேம். (செயலாளர்.)

சாத்திரப் பகுதி:

கொலை

(சி. வை. வன்னியநாதன், இலங்கை.)

கொலையாவது ஒருயிரை அதன் நிலைக்களமாகிய உடம்பினின்றும் பிரித்தலேயாகும். இப்பாவமாவது மற்றெல்லாப் பாவங்களிலும் மகாகொடியதும், பிராயச்சித்தங்களினால் நீக்கக்கூடாததுமாகும். கொலையே பாவத்திற்கெல்லாம் தலையாதலின் கொல்லாமையே புண்ணியங்களெல்லாவற்றிற்குந் தலையாகும். இதை வள்ளுவர் பெருமான், "அறவினையாதெனில் கொல்லாமை கோறல் பிறவினையெல்லாந் தரும்," என்றார். கொல்லாமை புண்ணியங்கள் எல்லாவற்றையும், கொலை பாவங்கள் எல்லாவற்றையும் தரும் என்பது இதன் பொருள்.

இக்கொலையால் வரும் பாவமானது, இப்பிறவியில் அற்ப ஆயுளையும்; அபகீர்த்தியையும், அச்சத்தையும் தந்து மறுபிறப்பிலே எண்ணுதற்கரிய ரௌரவம் முதல் கும்பிபாகம் வரையுள்ள இருபத்தெட்டுக் கோடி நரகில் தப்பாது விழுத்தும் என்பது உண்மையே. நரகத்துன்பம் அனுபவித்தபின்பு எஞ்சிய பாவத்தால் இப்பூமியிலே நாயிலும் கடைப்பட்ட பிறவிகளில் அதி துன்பத்திற்கு ஆளாவோம். இக்கொலைப் பாவமானது ஒன்று இரண்டு பிறவிகளில் நீங்கத்தக்கதன்று; ஏழுபிறப்பும் தொடர்ந்து வருத்தி நரகிடையழுத்தும் வலிய பாவமாம்.

ஓர் உயிரினின்றும் நீங்கிய உடம்பைப் புசிப்பவனுடைய மனமானது, படைக் கருவியைத் தாங்கிய போர் வீரனுடைய மனம் போல, நல்ல காரியத்திற் செல்லாது என்பதை, "படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன் உடல் சுவையுண்டார் மனம்" என்றார். முற்பிறப்பிலே நண்டினை உருசியுடையதென்று விரும்பி அதன் காலை முறித்து வறுத்து, தம் நாக்குச் சுவைக்கவுண்டோர் மறுபிறப்பில், நண்டின் காலைமுறித்த தங்கள் கைகள் தசையழிந்து அழுக, விரலழுக, சீள்வடிய, ஈ எறும்பு மொய்க்க அகோர ரூபந் தாங்கிப் பெருவியாதி

பிடித்து வருந்துவார். நண்டினை உண்டோர்க்கு இது பயனுயின், ஆடு, மாடு கோழி, பன்றி, முயல், ஆகிய இவற்றை 'ஐயகோ' என்றலறவெட்டியருந்தினோர் என்ன வியாதியடைந்து வருந்துவாரோ அறியோம்?

இது நிற்க, கிறிஸ்தவர்கள் கொலையால் பாவம் வருதல் உண்மையெனினும், எல்லாக் கொலையாலும் பாவம் வராது; மனுஷனை மனுஷன் கொன்றால்தான் பாவம். மிருகங்களை மனிதன் கொல்லல் பாவமன்று; ஏனெனில் மனிதருக்காகத்தான் பிற உயிர்களைக் கர்த்தர் படைத்தார் என்று சத்திய வேதம் கூறுகிறது என்பர். இக்கூற்று முற்றிலும் தவறு என்பது நமது சைவசமயத்தின் கோட்பாடு, கடவுள் மனிதருக்காக மிருகம், பறவை முதலியவற்றைப் படைத்தாரென்றால், யானை, சிங்கம், குரங்கு, நாய், காகம், பாம்பு, நுண்ணிய கிருமிகள் ஆகியவைகளை எதற்காகப் படைத்தாரென்பது நமக்குப்புரியாத புதிராகியிருக்கிறது. "கொல்லான் புலாலை மறுத்தானைக் கை கூப்பி எல்லா உயிரும் தொழும்"—குறள்.

மேலும், மிருக சாதிகளில் பசு உயர்ந்ததும், பன்றி தாழ்ந்ததுமாம். அது போலவே, மனிதரிலும் பிராமணன் உயர்ந்தவன்; புலையன் தாழ்ந்தவன். பஞ்ச கவ்வியங்களைக் கொடுக்கும் தன்மையுடையதாதலால் பசு உயர்ந்ததாகும். அப்படிப்பட்ட திரவியங்களை சுவாமிக்கு அபிஷேகித்து மந்திரம் செபித்து தேவ பூசை செய்யும் பிராமணன் எவ்வளவு உயர்ந்தவன் என்பது புலப்படுகிறது? பன்றியும் பறையனும் இழிதொழிலுடைமையால் அவை தாழ்ந்தவையாகும். பன்றியைக் கொன்ற பாவத்திலும், பசுவைக் கொன்ற பாவம் அதிகமாகும். அதுபோலவே புலையனைக் கொன்ற பாவத்திலும், பிராமணனைக்கொன்ற பாவம் மகாபாதகம்.

கண்ணப்ப நாயனர் ஈசனுக்கு மாமிசத்தைப் படைத்தார். ஈசனும் அதை ஏற்றுத் திருவமுது செய்தார். மனிதனுக்கு அப்பாற்பட்ட கடவுள் மாமிசத்தை உண்டாரென்றால், மனிதராகிய நாம் ஏன் உண்ணக் கூடாது? என்று சில பாமரமக்கள் எம்முடன் வாதாடுவது சகசமே. ஆனல் தலையன்புருவாகிய கண்ணப்பர் சிவபிரானின் கண்ணி

லிருந்து உதிரம் சொரிந்தபோது, ''ஊனுக்கு ஊனிடல் வேண்டும்,'' என்ற பக்தி மேலீட்டால் தனது கண்ணில் ஒன்றைப் பிடுங்கி வைத்தார். அவ்வாறு செய்ய நாம் தைரியம் உள்ளவர்களாய் இருக்கிறோமோ? ஒருபோதும் இல்லை. அவ்வாறு செய்த நாயனார் ஆறு நாட்களில் முக்தியும் பெற்றார்.

நிற்க! சிலர் தாம் சாதிமான்களென்றும், உயர்ந்தோரென்றும், கூறிக்கொண்டு தம்மிலும் தாழ்ந்த சாதியார் வீட்டில் சலபானம் செய்யாது பெருமை பாராட்டியும், புலையர், மலம் முதலியவற்றைக் கண்டு தூர ஓடியும், அயல் வீட்டில் பிணங்கிடந்தாலும் தாம் உணவுண்ண மனம் ஒருப்படாது அருவருத்து நிற்பவர்கள்,புலையரின் மலத்தை உண்ணும் பன்றி,கோழி முதலியவற்றை மனவிருப்போடு அறுத்துச் சமைத்து உண்கிறார்கள். இது எவ்வளவு ஆச்சரியம்! இப்படிப்பட்ட மலந்தின்னும் பிராணிகளை உண்பவர்களே புலையரிலும் புலையராவார். இந்த இடத்திலே இரு பொருத்தமான செய்யுள்கள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. அவை பின்வருமாறு:—

''பலையரைப் புலையரென்னும் புத்தியற்ற மாந்தரே!
புலையனார் மலம்புசிக்க நாடுமீது புத்தியோ?
புலையருக்கு ளொக்குமும்மை என்றுரைத்த புல்லரும்
புலையராகி நரகினுட் புகுவரையராணையே'' என்றும்,

''பறையரைப் பறையரென்று பறைந்திடும் மனிதர்! கேளீர்!
பறையர்தம் மலத்தைத் தின்ற பன்றியைப் புசிப்பதேனோ?
கறையதே யாகுமந்தக் கறியதைக் கலத்திலிட்டு
மறையவே வைத்துத் தின்னும் மனிதரே பறையர் கண்டீர்''

மேலும், சில சைவர்கள் ஐப்பசி, கார்த்திகை மாதங்களிலும் வெள்ளி செவ்வாய் வாரங்களிலும், திருவிழாக் காலங்களிலும், விரத காலங்களிலும் என்னும் இனனோரன்ன பொழுதிலும். மாமிசம் புசிக்காமலும் கொலை முதலிய பாவங்களைச் செய்யாமலும் வெகு புனிதராய் இருக்கிறார்கள். மாமிசம் புசித்தல் பாவமென்று உணருகின்றவர்கள்தான் மேலே கூறிய புனிதராவார். இதை உணரு

கிற புனிதர்கள் மாமிசத்தை எஞ்ஞான்றும் நீக்கிவிட்டுப் புனிதராய் இருத்தல் மிகப் புண்ணியமென்றதை அறியாது விட்டது என்ன மயக்கமோ? அறியோம்.

''கலையெலாமுணர்ந்தானேனும் கரிசறத் தெளிந்தானேனும்
மலையெனயுயர்ந்தானேனும் மனமயலகன்றுனேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க்குதவிய கையனேனும்
இலகிய ஊனையுண்போர் எழுநரகடைவரன்றே''

இவைகளின் பொருள் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் அனைவருக்கும் விளங்குமென்பது எனது கருத்தாகும். இப்படிப்பட்ட சுருதி யுத்தி அனுபவம்வாய்ந்த கட்டுரைகளைக் கற்றாரும் மற்றாரும் பார்த்துப் பயனடையவேண்டுமென்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சிலம்பில் வழிபாடு

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞானசம்பந்தன்

சிலப்பதிகாரம் வாழ்வியலுக்கும், உலகியலுக்கும், பொது வாழ்விற்கும் காழ்ப்பகன்ற சமய நோக்கிற்கும், நிலைக்களனாக விளங்குவது. இந்நூலை யாத்தவரே சேர மன்னரின் மரபுதித்த இளங்கோவடிகளாவர். இவர் காலத்தின் வழிபாட்டின் நிலையினை யீண்டுணர்தல் நன்றாம்.

இளங்கோவடிகட்குச் சிலப்பதிகாரத்தைத் தோற்றுவித்தற்கும், தொல்காப்பியமே துணை நின்றாக்கியது. இசை முதலான நுணுக்கங்களையுணர்ந்துகொள்ள, இசை நூல்களான பரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குண நூல், செயிற்றியம் போன்ற நூல்கள், சிலம்பை வடித்தெடுக்க, அடிகளுக்கு இன்துணை புரிந்தன. அடிகள் காழ்ப்பு மனப்பான்மையற்றவர்களென்பதை அவர் பாத்திரங்களைப் பற்றியும், அவர்களின் சமயங்களைப் பற்றியும் கூறிச் செல்லும் முகமாக வுணரலாம். இளங்கோவடி

கள் சமயம் பற்றிப் பற்பல வாதப் போர்களும், ஐயப் போர்களும், நிகழினும் தான் மேற்கொண்ட நெறியமைப் பில் எவ்வித மாற்று மனமும் கொள்ளாமல், நடுநிலை நின்று, சமன் செய்து பார்த்து, நன்மையுற்ற வழிகளை நாடிச் சென்றவர்தான் அடிகளார். "மூர்க்கனும் முதலை யும் கொண்டது விடா" என்ற தன்மையற்று, எவற்றை யாய வேண்டுமோ, அவற்றையாய்ந்து பிறரும், சமயவாதி களும், மனம் புண்ணுரு வண்ணம், இயைந்து நடக்கு மியல்பு இளங்கோவடிகளாரிடம்தெற்றெனக்காணலாம். சில நூலாசிரியர்கள், தங்கள் போக்கிலிருந்தபடியே நின்று தாங்கள் கொள்ளும் கருத்துக்களையே எல்லா வகையானும், பரப்ப முன் வரும் நிலையைப் போலல்லாது எவ்வெவர் எவ்வெவ் வழியொழுகி நடந்தார்களோ அவ் வவர்க்கேற்ற செயல் முறைகளையுணர்ந்து, அவைகளைச் செவ்வனே வலியுறுத்துகின்ற சக்தி அடிகளார்க்கே மிகுதி யாகவுண்டு.

அடிகளார் பாட எடுத்துக்கொண்ட காப்பியம், சமணமும், பௌத்தமும், வைணவமும், சைவமும் கலந் தாற்போல் ஒன்றி நிற்பதொன்ருகும். இத்தகைய காப் பியத்தைத் தேர்ந்த இளங்கோவடிகட்கு, அறிவின் கூர் மையும், ஆக்கத்தின் சிறப்பும், நோக்கத்தின் மாண்பும், மிக்கு விளங்கினவென்பதில் ஐயமொன்றிலது. கூர்த்த மதி படைத்தவர்தான் இளங்கோவென்பதற்கு, அவர்தம் சமய வாய்வு மாண்பும், நாடகவமைப்பு மாண்பும், இசை நுணுக்கத் தோய்வும் மெத்த கரியாகின்றன. எட்டுணையும், எக்காலத்தும், மாற்றமிகு, நன்மனத்திற் ருேன்றிய கருத்துக்களைச் செவ்வனேயமைப்பதில் ஒப்புயர் வற்று விளங்குபவர் அடிகளாரே! சமய நூலுண்மைகளை யாய்வோர்க்கு, இயற்கை வயமாகவே நுண்ணறிவு தோன்றுமென்பது முந்தையோர் கண்ட உண்மை நெறி. சமய நோக்கிலீடுபட்ட பாத்திரங்களைக் கொண்டு வுண் மையை யறிவுறுத்த வருங்கால், இளங்கோவடிகள் தன்னினுனிகர் படைத்தவர் வேருருவருமில்லையென்ற நிலையில் நற்றுணை புரிவதோடல்லாமல், நலம்பல பெறு தற்குமுரியவராகின்ருர். சிறப்பாகச் சமண சமயத்தின் உண்மைகளையே எல்லா விடத்தும் உயர்வுறப் பேசிச்

செல்கின்ருர் என்னின், கண்ணகியின் பிறப்புச் சமயமான சமணமே (ஆருகதம்) எல்லா வகையானும் மெத்த வுயர்வு பெற்றதென்ற பெரு நோக்குடன்தான், சிறப்புடையளான கண்ணகியைச் சார்ந்தும், அவள் சமயத்தை நன்கு போற்றுகின்ருர்.

சிலப்பதிகாரத்தில் சிறப்பாகத் தமிழகத்தின்கடவுளர்கள் நிலைபற்றிப் பழம் பெரும் பெருமைகளுடன்' நிறுவி சமய மாண்பின் உண்மைகளை யுய்த்துணருமாறு புகட்டுகின்ருர் தண்டமிழ்ப் பெரு வேந்தரான இளங்கோவடிகள். கடலாடு காதையில், தேவர் புரமெரியுங் காலத்துச் சிவபெருமான் சயாநந்தத்தாற் கைகொட்டியாடுவதைக் காண்க! அவுணர்களினுட்டம் கட்டுக் கடங்காமற் போகவே, தேவர்கள் எம்பெருமானை கண்ணுதற் கடவுளை, அவர்களாட்டத்தை அடக்குவிக்க வேண்டுமென்று வேண்டவும், புரமெரியவைத்தற்கு, வடவாக்கினியைத் தன் வயமாகக் கொண்ட வோரம்பினைப் பெருமானேவிவிட, அப்புரத்தில் வாழ்ந்த அவுணர் வெந்து, விழுந்து, வெள்ளிய எலும்புக் குவையாகிக் கிடக்கவும், பாரதியரங்கத்திலே, உமையவளொரு கூற்றினளாய் நின்று, பாணி, தூக்குச் சீரென்னுந் தாளங்களைச் செலுத்தவும் தேவர் யாவரினு முயர்ந்த தேவாதி தேவனை விறைவன் சயாநந்தத்தாற் கைகளைக் கொட்டி நின்ருடியது கொடுகொட்டியென்னும் ஆடலென்று, சிவனுடிய ஆடலைச் சிறப்பிக்கின்ருர் இளங்கோவடிகள்.

"திரிபுர மெரியத் தேவர் வேண்ட
எரிமுகப் பேரம் பேவர் கேட்ப,
உமையவ ளொருதிறனுக வோங்கிய,
இமைய வனுடிய கொடுகொட்டி யாடலும்"

—சிலம்பு காதை 6. (வரி—40-43)

தமிழ் நாட்டினெல்லையை வரையறை செய்ய வருங் காலத்து, அடிகளார் வடக்கே வேங்கடத்தையும், தெற்கே குமரியையும் குறிப்பிடுகின்ருர். வேங்கடத்திற்ருன், நெடியோன் நின்ற வண்ணங் கொண்டு தன்னுட்சி

நிகழ்த்துகின்றான். அடிகளாரின் காலத்திற்றான் வேங்கட மலையில் நெடியோன் திருக்கோவிற் கொண்டிலங்குகின்றான் என்ற வுண்மையினை வுணர்த்துகின்றார். இளங்கோவடிகட் காலத்திற்கு முற்பட்ட புறநானூற்றிலேயும், வேங்கடமலை, வேங்கடநாடன் என்று பாடல்களில் சொற்களாண்டு வரினும், நெடியோனைப்பற்றிய நிலையை இளங்கோவடிகளே வுணர்த்துகின்றார். அடிகளார் காலத்திற்கு முன்னர்த் தமிழ்நாட்டினெல்லை விரிந்து, பரந்திருக்க வேண்டுமென்ற வுண்மையினைப் 'பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள என்ற வுண்மையால், தமிழ் நாட்டினெல்லை சுருங்கலாயிற்று. அன்றியும் தென்பால் குமரியைச் சார்ந்து, நீலக் கடல் நோக்கித் தவம் புரிந்து கொண்டிருக்கும் அன்னையவளைச் சிறப்புறப் பேசுகின்றார் அடிகளார். இக்குமரியே தமிழ்நாட்டை மேலும் நீராற் கொள்ளை கொள்ளாமல் காக்கின்றாள். நாட்டின் எல்லை கூற வந்த அடிகளார் நெடியோனையும், தமிழ்க்குமரியையும் நினைவுறுத்தி வழிபடுகின்றார்.

> 'நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
> தமிழ்வரம் பறுத்த தண்புன னன்னாட்டு.'
>
> —சிலம்பு காதை 8 (வரி 1–2)

கோவலனும், கண்ணகியும், நாட்டைக் கடந்து, காட்டையும் கடந்து, சமணத் துறவியான கவுந்தியடிகளுடன், மதுரைக்குப் புறப்படுகின்றனர். அங்ஙனம் மூவரும் செல்லுங்கால், வழியில் தீர்த்தங்களாடிவரும் மாங்காட்டு மறையவனைக் கண்டு மதுரைக்குச் செல்லுதற்குரிய வழியை வினவுகின்றனர். அதற்குப் பதிலிறுக்கப் போந்த மறையோன், மதுரைக்குப் பிரிகின்ற வழியைச் சிவபெருமானின் மூவிலை வேலுக்கு, உவமிக்கின்றான். பாறைகளும் குழாங்கற்களும், நிறைந்து நடக்க முடியாவண்ணம் ஊறு விளைவிக்கும் தன்மை மிகக் கொண்ட பெரிய பாலைக் காட்டை. நீத்துப் போய், கொடும்பாளூர் நெடுங்குளமென்றும் இரண்டூர்க்கும், பொதுவாகிய ஏரியினது கரையைக் கழிந்து சென்றால் முடிவின்கண் பாதி நிலவை சடை,

மாலையாகச் சூடிய இறைவன் மூவிலைச் சூல வேலைப்போல மூன்று வழியறிதற்கரியதான வழிகள் தோற்றும், என்று மேற்கொண்டு வழி கூறிச் சென்றான்.

''நெடும்பே ரத்த நீந்திச் சென்று,
கொடும்பை நெடுங்குளக் கோட்டகம் புக்காற்,
பிறைமுடிக் கண்ணிப் பெரியோ னேந்திய,
அறை வாய்ச் சூலத் தருநெறி கவர்க்கும்''

—சிலம்பு: காதை 11. (வரி—70-73)

கவுந்தியடிகள், கண்ணகி, கோவலன் இருவரையும், மாதிரியிடம் சென்று அடைக்கலப் பொருளாக விட்டு விட்டு மதுரை நோக்கிப் புறப்பட்டார். அங்ஙனம் தங்கிய கண்ணகியும் கோவலனும் அவ்வாயர்பாடியில். உணவு வுண்கின்றனர் இங்ஙனம் உண்ட கோவலனைக் கண்ட மாதிரியும் அவள் மகள் ஐயையும் சேர்ந்து வியக்கின்றார் கள். வியந்து, "இவ்வாயர் பாடியில் யாம் பெற்ற இந் நல்லமுதம் உண்கின்ற இந்த நம்பி அந்த மதுரையி லாயர் பாடியில் அசோதை பெற்ற அந்த நல்லமுத முண்ணும் புதிய காயாம்பூப் போலும் வண்ணத்தையுடைய கண்ண னேதான்; இவன் துயர் தீர்த்த இப்பல்வளைத் தோளியும் காளிந்தியாற்றின்கண் தூய நீலமணி வண்ணத் துயர் தீர்த்த பின்னையென்னும் விளக்கேதானென்று உவகை பொங்கி, இவர் அழகு நம் கண்களின் அடங்காவென்று புகழ்ந்து கூறுவென்க" (அடியார்க்கு நல்லாருரை)

''அரசர் பின்னோர்க் கருமறை மருங்கின்,
உரிய வெல்லா மொருமுறை கழித்தாங்,
காயர் பாடியி னசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ,
நல்லமுதுண்ணு நம்பி யிங்குப்,
பல்வளைத் தோளியும் பண்டு நங் குலத்துத்
தொழுனை யாற்றினுட் டுமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்லென''

—சிலம்பு: காதை 16 (வரி—44-51)

மேற்கண்ட வற்ருல், கண்ணன் வழிபாட்டுணர்ச்சி ஆயர் சேரியில் சிறப்புற வக்காலத்தில் விளங்குற்றதென்பதை இளங்கோவடிகள், கோவலனுக்கு உவமித்தல்மூலம் நன்குணர்த்துகின்ருர். அன்றியும் கண்ணன் நல்லமுதுண்டான் என்பதையும் மாதிரி, ஐயை யிருவர்மூலம் உணர்த்துகின்ருர்.

கோவலன் கொலேக்களப்பட்டான். ஆயர்பாடியில் நிறைந்த உற்பாதங்கள் நிகழ்கின்றன. பால் உறையாமல் போகவும், தயிர் தோயாமல் போகவும், துன்பம் வரும் என்றஞ்சி வருத்த முறுகின்ருள், கண்ணகியின் உயிர்த் தோழியான ஐயையும், அவள் தாய் மாதிரியும். ஆயர் பாடியிலுள்ள ஆனினங்கள், பிணிபட்டு வாடுகின்றன. இதற்குக் குரவையாடலே நியாயம் என்றுணர்கின்றனர். இங்ஙனம், குரவையாடுங்காலும், மேலும் உற்பாதங்கள் நிகழ்கின்றன. அங்ஙனம் குரவையாடுங்கால், தன்னின் கடவுளான மாயவனே நோக்கிவந்தித்து வழிபாடு நிகழ்த்து கின்றனர் ஆயர்கள். அவற்றுட் சில ஈண்டுக் காண்போம்.

"கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்று நம் மானுள் வருமே லவன் வாயிற்,
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழி!"

—சிலம்பு; ஆய்ச்சி 19 (காதை–17)

"பாம்பு கயிருக் கடல் கடைந்த மாயவன்,
ஈங்கு நம்மானுள் வருமேலவன் வாயில்,
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழி"

—சிலம்பு: ஆய்ச்சி 20 (காதை 17)

"மாயவன்றம் முன்னினெடும் வரிவளேக் கைப் பின்னேயொடும்
கோவலர்தஞ் சிறுமியர்கள் குழற்கோதை புறஞ்சேர,
ஆய்வளே சீர்க் கடிபெயர்த் திட்ட சோதையார தொழுதேத்தத்
தாதெரு மன்றத்தாடுங் குரவையோ தகவுடைத்தே,
எல்லா நாம்,
புள்ளூர் கடவுளேப் போற்றுதும், போற்றுதும்'
உள்வரிப் பாணியொன் றற்று"

—சிலம்பு: ஆய்ச்சி 28 (காதை 17)

'வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணுக்கிக்,
கடல் வண்ணன் பண்டொரு நாட் கடல் வயிறு கலக்கினேயே'

—சிலம்பு: ஆய்ச்சி 32 (காதை 17)

''மூவுலகு மீரடியான் முறை நிரம்பா வகை முடியத்,
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடுங் கான்போந்து'

—சிலம்பு: ஆய்ச்சி 35 (காதை 17)

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்''

—சிலம்பு. ஆய்ச்சி 36 (காதை 17)

''மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனுர் வஞ்சம்,
கடந்தானை நூற்றுவர்பா னுற்றிசையும் போற்றப்,
படர்ந்தா ரண முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணு வென்ஞு நாவென்ன நாவே''

—சிலம்பு: ஆய்ச்சி 37 (காதை 17)

செங்குட்டுவன் இமையப் படையெடுப்போடு, கண்ணகியென்னும் கற்புத்தெய்வத்திற்கு, சிலைவடிக்கக் கல் கொணர்தற்குப் போர்க் கோலம் கொள்கின்ருன். செங்குட்டுவன் கட்டவிழ்ந்த வஞ்சிப் பூவினைத் தன்னுடைய திருமுடியிலே சூட்டிப் போர் முரசு முழக்கநின்ருன். இங்ஙனம் போர்க் கோலங் கொள்ளுங்கால், திருமாலின் சேடங்கொண்டு சிலர் நின்று அரசனை வணங்கினர். கங்கைப்பேராற்றினைத் தன் சடையிலேயுடைய கடவுளின் எழிலார்ந்த செவ்வையான திருவடிகளைத் தன் முடியின் மீது வைத்திருந்ததனல், அவ்விடத்துத் திருமாலின் சேடத்தை வாங்கி யழகிய மணிகள் விளங்குந்தன் தோள் மீது தாங்கிக் கொண்டு, பெருஞ்சிறப்புடனே, பெருமித நினைவோடு சென்ருன் செங்குட்டுவன். அதனல் சேர நாட்டின் பெரு மன்னனுன செங்குட்டுவனுக்குச் சைவப் பற்றுடன் சிவபரம்பொருளே உய்வைத் தருபவன் என்ற

வெண்ண மிருந்த போதிலும் திருமாலிடத்தும் பெரும் பற்றுக் கொண்டிலங்கினன் என்பது கண்கூடு.

"குடக்கோக் குட்டுவன் கொற்றங் கொள்கென
ஆடக மாடத்தறி துயி லமர்ந்தோன்,
சேடங் கொண்டு சிலர்நின் றேத்தத்,
தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்,
வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்,
ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்,
தாங்கினனாகித் தகைமையிற் செல்வுழி"

—சிலம்பு: கால்கோள். (வரி—61–67) காதை 26

வரந்தரு காதை 30–ல் மாடல மறையோன் செங்குட்டுவனை வாழ்த்தி மனம் பெரி துவக்கின்றான். அவன் வாழ்த்தின் பெருமை யுரைகளை யீண்டுக் காண்க! இம்மையில் நல்லறப் பணிகளிலே இறங்கியோர் பொன்னுலகம் சேர்த்தலும் அன்பால் பற்றுள்ளம், மிக்குடையோர், அப்பற்றின் காரணமாக மீண்டுமிவ் வுலகத்துப் பிறத்தலும் அறத்தாற்று வழியில் நிற்போற்கு வதனாற் பெறும் பலன் தப்பாது நிகழ்தலும், பிறந்த மக்கள் இம்மண்ணிற்கே வுணவாதலும், இறந்தவர் மண்ணிடையே மீண்டும் பிறப்பதும் இவ்வுலகிற்குப் புதுமையன்று; தொன்மைக் காலந் தொட்டே, நடந்துவரும் வாழ்க்கையிற் காணுமுண்மையாகும். ஆனேற்றினை யூர்தியாகக் கொண்ட சிவபெருமான் றன்னருளினால் வஞ்சியென்னும் வெற்றியூரிலே தோன்றி, தன் பெருநாடு விளக்கமுறுமாறு செய்த மன்னவன் செங்குட்டுவனாதலின், செய்த அறப்பேற்றினுக்கங்களைக் கொண்டு, உற்றறிவா லுயர்ந்தோரது உண்மை நினைவுகளை மன்னனாகிய சேரன் கண்டனன். ஊழி பல் காற் பல்வளம் பெற்ற மன்னன் நெடிது வாழ்க வென்றான் மாடல மறையோன்.

"ஆனே றூர்ந்தோ னருளிற் றோன்றி
மாநிலம் விளங்கிய மன்னவ னாதலிற்
தெய்வப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமும்
கையகத் தனபோற் கண்டனை யன்றே,
ஊழிதோ றூழி யுலகங் காத்து,

நீடு வாழியரோ நெடுந்தகை யென்ற,
மாடல மறையோன் றன்னொடு மகிழ்ந்து''

—சிலம்பு. காதை 30 (வரி—141–147)

சிலப்பதிகாரத்தை நோக்குழி, அக்காப்பிய காலத்தில் ஒரு குடும்பத்தில் பிறந்து வாழ்ந்தவர்களிடையேயும், சமய வேறுபாடும், கடவுள் வழிபாட்டில் மாறுபாடும் இருந்ததாகக் காண்கின்ருேம், ஒரு சமயத்தில் தோன்றும் ஆணுக்கும், இன்னொரு சமயத்திற் ருேன்றும் பெண்ணுக்கும் எவ்வித வேறுபாடும், மாறுபாடுமின்றி மணம் நிகழ்ந்ததையும் உணர்கின்ருேம். காலத்தின் வேகத்திலே நாட்டினிருப்பு நிலைக்கேற்ப சமயங்களும், கடவுளர்களின் வழிபாடும் நிகழ்ந்துள்ளன. இளங்கோவடிகள் பிறப்பால் சைவரேயெனினும், அவர் வாழ்க்கையில் மனம் நொந்தவராகித் துறவு மேற்கொள்ளுங்கால் ஆருகதமேற்று குணவாயிற் கோட்டத்துச் சென்றிருந்தார் என்பதை யுணர்கின்ருேம். சைன காப்பியத்தைப் பாட வந்த அடிகள், எல்லாப் பாத்திரங்கள் பின் பற்றிய சமயங்களையும், கடவுளர்களையும் எவ்வித வேறுபாட்டுணர்வும் கற்பிக்காமல், அவ்வவர் சமய நூல்களின் வழிநின்று "வழிபாட்டுணர்வு" பெருகும் வண்ணம் முத்தமிழ்க் காப்பியமான "சிலப்பதிகாரத்தைத்" தோற்றுவித்தார்.

சித்திரை மாத விசேடதினங்கள்

1	(13—4—65)	தில்லை வாழந்தணர் விழா
4	(16—4—65)	திருக்குறிப்புத் தொண்டர் விழா
14	(26—4—65)	திருநாவுக்கரசர் விழா
19	(1—5—65)	சிறுத்தொண்டர் விழா
21	(3—5—65)	மங்கையர்க்கரசியார் விழா
23	(5—5—65)	விறன்மிண்ட நாயனர் விழா
25	(7—5—65)	கச்சியப்ப முனிவர் விழா
26	(8—5—65)	சிவஞான சுவாமிகள் விழா
30	(12—5—65)	உமாபதி சிவாச்சாரியார் விழா
31	(13—5—65)	இசை ஞானியார் விழா

அமரர்

பாஸ்கரத் தொண்டைமான்

(G. M. முத்துசாமிப்பிள்ளை)

திரு. பாஸ்கரத் தொண்டைமான் M.A., I.A S. (Retd.) அவர்கள் அண்மையில் இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர் என்ற செய்தி பல்லாயிரக் கணக்கிலுள்ள மக்களைத் துயரக் கடலில் ஆழ்த்தியது. 1904-ஆம் ஆண்டில் தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு தமிழ்க் குடும்பத்தில் தோன்றித் தமது முயற்சியாலும் நேர்மையான நடத்தையாலும் வாழ்க்கையில் வெற்றி கண்ட ஒரு பெரியார். பண்பிற்கு இவர் ஓரிருப்பிடமாதலால், இவருக்கு அமைந்த நண்பர்கள் அநேகர். மதிப்பிடத்தக்க பல பெரியோர்களால் சிறந்த வகையில் மதிக்கப்பட்டவர். சென்ற ஆண்டில் அவரது மணிவிழா (அறுபது ஆண்டு நிறைவு விழா) மிகச் சிறப்பாக நடந்தது. அவ் விழாவில் கலந்து கொண்டவர்கள் அவர் அரும் பெருங் குணங்களையும் ஆற்றல்களையும் விளக்கியுள்ளார்கள். அங்குச் செல்ல இயலாதவர்களுக்குஅம் மணிவிழா மலர் அப் பெரியாரைப் பற்றி விளக்கம் தந்து கொண்டே இருக்கும். அன்னார் மறைவு சைவ உலகிற்கு ஈடுசெய்யப்படாததோர் இழப்பாகும் என்பதைப் பற்றிச் சிந்திப்பது நம் கடமையாகும். திரு. பாஸ்கரத்தொண்டைமான் அவர்கள் சைவத்தில் திளைத்தவர். விரத நாட்களில் இறைவனை நினைந்து நினைந்து உருகுபவர். உண்மையிலே பட்டினியிருந்து விரதம் காப்பவர். இத்தகையவர் நீண்டகாலமாகச் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் தொடர்பு கொண்டிருந்தார். பத்தாண்டுகளுக்கு முன்னர் மகாசமாஜச் சிறப்புக்கூட்டங்களில் சைவச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அது சமயம் யான் அவருடன் இருந்து அச்சொற்பொழிவுகளின் ஆழத்தையும் இனிமையையும் அனுபவித்து மகிழ்ந்தேன். சமாஜத்தின் அங்கத்தினரானதுடன் அவர் நெல்லை மாவட்டத்தின் சமாஜப் பெரியாராகச் சென்ற இரண்டு ஆண்டுகளாகப்

பணியாற்றினர். சைவ சித்தாந்தக் கொள்கைகளை எளி தில் விளக்கும் ஆற்றலுடையவர்.

ஒருவர், இவ்வுலகில் ஆற்றக்கூடிய பணிகள் எல்லா வற்றிலும் தலை சிறந்தது தெய்வப் பணியாகும் என்பதை ஆன்றோர்கள் எடுத்துக் கூறியுள்ளார்கள். மாவட்ட ஆட் சித் தலைவராக அவர்கள் பலபணிகளை வெற்றியுடன் செய்து முடித்துத் தந்துள்ளார். எனினும் அவற்றினும் மாண் புடைத்து அவர் ஆற்றிய தெய்வப்பணி. எங்கெங்கு திருக் கோயில்கள் உள்ளனவோ அங்கங்கெல்லாம் அவர் செல்வார். ஏடுகளில் காணப்படும் 'செய்திகளோடு ஆங்குள்ள பெரி யோர்களிடம் தெரிந்து கொள்ளத் தக்க செய்திகளைச் சேக ரித்து இனியமுறையில் பலரும் அறியும்' வகையில் தெய் வீகக் கொள்கைகளை விளக்கம் செய்து வந்தனர்.

"சிவசிவ என் கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே"

என்பது திருமூல குரு வாக்கு. தீவினைக்குட்பட்டுச் சிவ சிவ என்று சொல்ல அறியாதார்க்கும் சிவசிவ என்னும் மந் திரத்தை ஓதுமாறு கற்பித்தவர் திரு.பாஸ்கரனார் அவர்கள். இவரால் தீவினைகளிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள் பல்லா யிரக் கணக்கில் உள்ளனர் என்பது திண்ணம். இத்தகைய பேருதவி செய்த புண்ணியசீலர் இறைவன் திருவடி நிழலில் பேரின்பம் அடைந்திருப்பார் என்பது உறுதி. அன்னார் வாழ்க்கை நமக்கு வழிகாட்ட வேண்டும். அன்னார் ஆன்மா இறைவன் திருவடியில் என்றும் சாந்தி பெற்றிருக்க இறை வன் திருவருள் பாலிப்பாராக!

வாழ்க அமரர் பாஸ்கரத் தொண்டைமான்!

வளர்க அவர் தம் தொண்டு!!

ரஷிய மொழியில் திருக்குறளும் திருவிளையாடல் புராணக் கதையும்

(நல். மு.)

திருக்குறளை திரு. ஜெ. கிளாஸாவும், திரு. ஏ. கிருஷ்ணமூர்த்தியும் ருஷிய மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். இது மாஸ்கோவில் 1963-ல் வெளியாக்கப் பட்டது. (பக்கங்கள் 156. விலை 45 கோபெக். 100 கோ— ரூ. 5-29) திரு. கிளாஸாவ் சிறந்த தமிழ் அறிவாளி. முன்னுரையாக 30 பக்கங்கள் நூலைப் பற்றியும் நூலாசிரியரைப் பற்றியும் எழுதியுள்ளார். குறள் இந்திய சமுதாய தத்துவத்தின் சிறந்த பரிணாமம் (The sublimation of Indian social thought) என்று பாராட்டியுள்ளார். ஆசிரியரான திருவள்ளுவர் பரந்த கொள்கையுடையவர் என்று குறிப்பித்துள்ளார் (free from cloistered and narrow sectarianism) குறளைப்பற்றிய நூல்களைப் பற்றியும் (Kuralogy) கூறியுள்ளார். மொழி பெயர்ப்பு வெகு அக்கரையுடன் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அது ருஷிய கவி டார்ஜினியின் செய்யுள் நடைபோல் அமைந்திருக்கிறதென்றும், ஜிக்கோஸ்லவாகியா தமிழ்த் துறைப் பேராசிரியர் டாக்டர் காமில் ஸ்வெலபில் ஒரு மதிப்புரையில் பாராட்டியுள்ளார்.

திருவிளையாடல் புராணத்தை மொழி பெயர்த்தவர் டாக்டர் ஏ. எம். பிடிகார்ஸ்கி (பக்கங்கள் 150, விலை 45 கோபெக்) இவர் தமிழ் அறிவாளியுமன்றி சைவ சமயத்தில் நல்ல ஆராய்ச்சியாளர். சைவ சமய பக்தி தத்துவத்தைப் பற்றிப்பல அரிய புதிய நுட்பங்களை இவர் எடுத்துக்காட்டுகிறார். (Tamil bhakti appears to be, according to Pjatigorski, an ideological reaction against brahminism which was tied with

the formation of class-society in the South, whereas in the North the bhakti movement is the expression of the struggle against feudalism.) ஆசிரியர் சிற்சில இடங்களில் தமிழிலிருந்து மொழி பெயர்த்தும், மற்றைய இடங்களில் தமது சொந்த வசனத்திலும் கதைகளை பக்தி நயம் பொருந்த எழுதியுள்ளார்.

இந்த இரு ருஷிய ஆசிரியர்களைப் பற்றி, டாக்டர் ஸ்வெலபில் கூறுவது: ''This atmosphere of interest and good will towards Tamil spiritual heritage which glazor and Pjatigorskji have succeeded to raise by their works is surely one of the main achievements of both Tamilologists'' (Archiv orientalni, vol 32, No. 4, 1964, Prague, czechoslovakia)

பிற செய்திகள்

வாலாஜாபேட்டை ஸ்ரீ ஏகாம்பரநாதர் பிரமோற்சவம் 8—3—65 முதல் 17—3—65 முடிய சிறப்பாக நிகழ்ந்தது. அவ்விழாவில் தினந்தோறும் பிரசங்க தர்ம பரிபாலனக் கமிட்டியின் சார்பில் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகள் கட்டளைப்படி 8—3—65 முதல் 17—3—65 வரை திருப்பனந்தாள் ஸ்ரீ வீரியம்மன் பங்குனி உத்திரப் பெருவிழா நிகழ்ந்தது. அங்கும் 17—3—65ல் திருவாரூரிலும் 21...3...65ல் காஞ்சிபுரத்திலும் தேவார விழாக்கள் சிறப்புற நிகழ்ந்தன.

புரசைத் திருநெறிக் கழக 49 ஆம் திங்கள் வழிபாடு 21...3...65 மாலை 4 மணிக்கு சென்னை நுங்கம்பாக்கம் ஸ்ரீ அகத்தீசுரர் ஆலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது.

சமாஜத் தேர்வுகளின் பாடத் திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் (பொது வியல், பொருளணியியல் மட்டும்.)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா, கந்தர் அநுபூதி, திருக்குறள், அறத்துப்பால் (பரிமேலழகர் உரையுடன்) சுந்தரர் தேவாரம் முழுவதும்.

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படி யார், உண்மை விளக்கம், திருவருட்பயன், கொடிக்கவி, வினா வெண்பா.

4. உரைநடை: சைவத்தின் சமரசம் (திரு.வி. க.), வாகீசர் அல்லது மெய்யுணர்தல் (சிவக் கவிமணி), பட்டினத் தார் வரலாறும் நூலாராய்ச்சியும், தாயுமானவர் வரலாறும் நூலாராய்ச்சியும் (கா. சு. பிள்ளை M. A, M.L.), பெரியபுராண வசனம், திருவிளையாடற் புராணவசனம் (ஆறுமுகநாவலர்).

சைவப் புலவர்

1. இலக்கணம்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்) சொல்லதிகாரம் (சேனாவரையம்) பொருளதிகாரம் (இளம் பூரணம்) தருக்கசங்கிரகம் (சிவ ஞான முனிவர்.)

2. இலக்கியம்: பெரிய புராணம் (திருநாவுக்கரசு புராணம் முழுவதும்), சம்பந்தர் தேவாரம் முழுவதும், திருவாசகம் முழுவதும், ஒன்பதாந் திருமுறை முழுவதும்

3. சாத்திரம்: சிவஞான போதச் சிற்றுரை, சிவ ஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை), சிவப் பிரகாசம், சங்கற்ப நிராகரணம்.

4. உரைநடை: சைவ சித்தாந்த ஞானபோதம் (மறைமலையடிகள்), சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (ந. சிவ குருநாத பிள்ளை) திருக்குறளின் உட்கிடை, சைவ சித்தாந்

தமே (க. வச்சிரவேல் முதலியார்),சிவஞான முனிவர் உரை நடை நூல்கள், பெரிய புராண சூசனம் (ஆறுமுக நாவலர்).

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க :

தேர்வு எழுத விரும்புவோர் பாடத் திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். முதல் வகுப்பில் தேர்ச்சிபெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக்கொண்டு பரிசு வழங்கப் பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30—9—65. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி ஞாயிற்றுக்கிமைகளில் நடைபெறும்.

1964ல் சமாஜத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:—

சைவப் புலவர்கள் தேர்வு

1.	சதாசிவம் கனகசபாபதி	எண் 1	III	வகுப்பு
2.	தம்பு சுவாமிநாதன்	,, 8	III	,,
3.	நாகமுத்தன் விசுவலிங்கம்	,, 5	III	,,
4.	முத்துக்குமாரசாமி திருஞான சம்பந்த பிள்ளை	,, 7	I	,,
5.	பஞ்சநாதேஸ்வரக்குருக்கள் விமலாதேவி	,, 10	II	,,

(திரு. முத்துக் குமாரசாமி திருஞான சம்பந்த பிள்ளை அவர்கள் முதல் வகுப்பில் வெற்றிபெற்றதால் அதற்குரிய பரிசுத்தொகையாக ஒரு மூலதனத்திலிருந்து வரும் வட்டித் தொகையாகிய ரூ. 50. (ஐம்பதினையும்) பரிசாகக் கொடுக்கப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.)

இளஞ் சைவப் புலவர் தேர்வு

1.	சரவணமுத்து தியாகராசா	எண் 6	III	வகுப்பு
2.	சுப்பிரமணியம் தம்பாபிள்ளை	,, 12	III	,,
3.	கதிரவேலு சிற்றம்பலம்	,, 14	III	,,
4.	இரத்தினசபாபதி இராசேஸ்வரி	19	II	,,

செய்திகள்

சைவ ஆகமங்களைப் பற்றிய பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள்;—

சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப்பட்ட முன்னாள் சென்னை மாநிலக் கல்லூரி சம்ஸ்கிருதப்பேராசிரியர் எல். வெங்கடரத்தினம் நாயுடு அவர்கள் நினைவுச் சொற்பொழிவுகள் இவ்வாண்டு மார்ச்சு மாதம் 29, 31 ஆகிய இரண்டு நாட்களில் சென்னை பச்சையப்பன் கல்லூரி வடமொழிப் பேராசிரியர் திரு. அ. சண்முகமுதலியார் எம்.ஏ. அவர்களால் நிகழ்த்தப்பெற்றன. சென்னைப் பல்கலைக் கழக வடமொழித்துறைத்தலைவர் டாக்டர். வே.இராகவன் அவர்கள் தலைமை தாங்கினார்கள். முதல் சொற்பொழிவில் "வேதங்களும் சைவ ஆகமங்களும்" என்னும் பொருள் பற்றிப் பேசியபோது ஆரியமும் செந்தமிழும் சிவபெருமானிடமிருந்து பெறப்பட்டன என்றும். வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்றும்,ஆகமம் எல்லாவருணத்தாருக்கும் பொது என்றும், அவை ஒரு கடவுளைப்பற்றியே பேசுகிறதென்றும் ஆகமங்களின் தொகை வகைகள்எவை என்றும் அவற்றினின்றும் நாம் அறியக் கூடிய செய்திகளுள் எப்படி கோவில் அமைப்பு, சிற்பம், பிரதிமை, பிரதிட்டை, சமய ஒழுக்கம், வழிபடுமுறை ஆகியவை இடம் பெற்றுள்ளன என்றும், சைவ ஆகம நூல்களின்றும், திருமந்திரம், சித்தாந்த சாத்திரங்கள் ஆகியவற்றினின்றும் மேற்கோள் காட்டி விளக்கினார்கள்:

இரண்டாவது நாள் பேருரையில் 'ஆகமமும் மதக் கோட்பாடுகளும் தத்துவக் கருத்துக்களும் என்பதுபற்றிப் பேசுகையில் ஆத்மார்த்தபூசை, தீக்கைக்கிரமங்கள், சரியை முதலான உபாயங்கள், திருக்கோயில் தத்துவம், நடராச தத்துவம். முப்பொருள் உண்மை, முத்திநிலை ஆகியவை பற்றியவிளக்கங்களை,சான்றுகளைக் காட்டிநிறுவினார்கள்.

ஜப்பானியப் பேராசிரியரின் சைவ சித்தாந்த ஈடுபாடு:

ஜப்பான் தேசத்து டோக்கியோ பல்கலைக் கழகத்தில் வடமொழி விரிவுரையாளராக இருக்கும் திரு. ஹர ஏன்

பவர் சென்னையில் கன்னிமரா விடுதியில் ஏப்ரல் 10 முதல் 14 வரை தங்கியிருப்பார்கள்; அவர்கள் அமெரிக்க ஹார் வார்டு பல்கலைக் கழகத்தில் 'சைவ மதங்கள்' பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தியதன் விளைவாக அண்மையில் Ph. D. பட்டம் பெற இருக்கிறார்கள் என்பது மகிழ்தற்குரியது. அவர்களைச் சமாஜத்தின் சார்பில் ஏப்ரல் 11ஆம் தேதிஒரு பேச்சு நிகழ்த்த ஏற்பாடு செய்ய உத்தேசித்துள்ளது.

புராதன நாணயத்தில் "திரு" என்ற சொல்

சென்னை மகாமகோபாத்தியாய பேராசிரியர் குப்புசுவாமி சாஸ்திரி வடமொழி ஆராய்ச்சிக் கழகத்தின் 20-ம்ஆண்டுவிழாவில் 1-4-65ல் டாக்டர் சி.பி.இராமசாமி அய்யர் அவர்களின் தலைமையில் திரு. எஸ். இராமய்யா, அக்கவுண்டண்டு ஜெனரல் (ஓய்வு) பேசுகையில் கூறியது: சதவாகன அரசர்களின் (கி.மு.2ஆம் நூற்றாண்டு) நாணயங்களில் பெரும்பான்மை தென் பிரமிய எழுத்துக்கள்தான் காணப்படுகின்றன. இது வடக்கத்தி அசோக பிரம்ம லிபியினின்று வேறுபட்டது. வசிட்ட புத்திர ஸ்ரீசதகரணி என்ற ஒரு அரசரின் வெள்ளி நாணயத்தில் (கி. பி. 2-ஆம் நூற்றாண்டு) "திரு சதகனிச் என்ற ஒரு சொற்றொடர் காணப்படுகிறது. இதனின்றும் ஸ்ரீ என்ற வடமொழி சொல்லுக்கு நேரான "திரு" என்ற தமிழ்ச் சொல் அந்தக் காலத்தில் ஆந்திரர்கள் (சதவாகனர்கள) பிரதேசத்தில்சிறப்பாகக் கையாளப்பட்டு வந்துளது என அறியக்கூடும்.

அன்பர் மறைவு

சைவ சித்தாந்த சமாஜத்துடன் முன்னாட்களில் தொடர்பு கொண்டவரும், ஈழநாட்டுச்சைவர்களுடன் மிகவும் தொடர்பு கொண்டவரும், பல சைவ சமய 'சிறு நூல்களை அச்சேற்றி வழங்கியவருமான திரு.சி.வி.ஜம்புலிங்கம் பிள்ளை (சூப்பரின்டண்டு, போஸ்டல் இலாகா அலுவலகம்)தமது 81ஆம் வயதில் சென்னை கிருஷ்ணாம்பேட்டை தம் இல்லத்தில்சென்ற பிப்பிரவரியில் சிவபதமடைந்தார். திரு. பிள்ளையவர்கள் நல்ல சைவர். அவர்களின் சைவ நூல்கள் சேமிப்பு வியக்கத்தக்கது.

உ

சிவமயம்

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜம்

மணிவிழா வேண்டுகோள்

—: ★ :—

சைவ சித்தாந்த மகா சமாஜம் ஓர் ஒப்பற்ற நிறுவனம். இது சிறந்த சைவப் பேர் அறிஞர்களால் தொடங்கப் பெற்று, சைவ அன்பர்களால் வளர்க்கப் பெற்று, ஜனநாயக முறையில் இயங்குகிறது. இதன் உறுப்பினர், தமிழ்நாடு மாவட்டங்கள், இலங்கை, மலேயா முதலிய இடங்களிலும் பரவி உள்ளனர். இது, தமிழ் வழங்கும் நாடுகளிலெல்லாம் சைவ மக்கள் உள்ளத்தில் நிரந்தர இடம் பெற்றுள்ளது.

இச் சமாஜம் முதன் முதலில் திருப்பாதிரிப்புலியூரில், தவத்திரு ஞானியாரடிகள் திருமடத்தில், விசுவாவசு ஆண்டு, ஆனித் திங்கள் 24-ஆம் நாள் (7—7—1905) வெள்ளிக்கிழமை தொடங்கப்பெற்றது. இச் சமாஜத் தோற்றத்தில் பங்கு கொண்ட சிறந்த பெரியார்கள் திரு. மறைமலையடிகளாரும், திரு. J. M. நல்லசாமிபிள்ளை அவர்களும், ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் அவர்களும், திரு. கல்யாணசுந்தர யதீந்தரரும் ஆவர். ஈழநாட்டுப் பெரியார்களாகிய திருவாளர்கள் - சர். பொன்னம்பலம் இராமநாதன், வட்டுக்கோட்டை - நாகலிங்கம் பிள்ளை, சர். கந்தையா வைத்தியநாதன், சமீபத்தில் சிவனடி சேர்ந்த சு. நடேசப்பிள்ளை, அவர்களும், மலேயா நாட்டு கா. இராமநாதன் செட்டியார் அவர்களும் இச் சமாஜ

ஆண்டுவிழாக்களில் தலைமை தாங்கியிருக்கிறார்கள். தமிழ் நாட்டில், இச் சமாஜத்தில் பங்கு கொள்ளாத சைவப் பெரும் புலவர்களே இல்லை என்று சொல்லலாம்.

சமாஜம் செய்துவரும் முக்கிய தொண்டுகளாவன:— ஒவ்வோராண்டிலும் மாநாடு, இடையிடையே சிறப்பு மாநாடுகள், திங்கள்தோறும் சென்னையிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் சமயக்கூட்டங்கள், தேவார வகுப்புகள், சாத்திர வகுப்புகள், கோடை விடுமுறையில் மாணவர்களுக்குச் சித்தாந்த சாத்திர வகுப்பு, முதியோர்களுக்குச் சித்தாந்த சாத்திரக் கோடைவகுப்பு, சைவப் புலவர் இளஞ்சைவப் புலவர் ஆகிய பட்டங்கள் வழங்கத் தேர்வுகள் நடத்துதல், தமிழ் இலக்கிய சமய தோத்திர சாத்திர நூல்கள் வெளியிடுதல் ஆகும். இதுவரை சமாஜ வெளியீடாக நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் அடக்க விலையில் வெளிவந்துள்ளன. மேலும் சமாஜம் "சித்தாந்தம்" என்ற திங்களிதழை வெளியிட்டு சமாஜ உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்குகின்றது. ஓர் ஆங்கில இதழ் தொடங்கமுயற்சிகள் நடந்துவருகின்றன.

ஐம்பத்தொன்பது ஆண்டுகள் சைவத்தொண்டு புரிந்த சமாஜத்திற்கு, இவ்வாண்டு 60-ம் ஆண்டு நிறைவு பெறுகிறது. சமாஜத்தின் மணி விழாவை இவ்வாண்டு டிசம்பர் மாதத்தில், சமாஜத்தின் வரலாற்றிற்கும் புகழுக்கும் ஏற்றவாறு சிறந்த முறையில் கொண்டாட சமாஜச் செயற்குழு தீர்மானித்திருக்கிறது.

மணிவிழா, ஆண்டு விழாக்களைப் போல் மூன்று நாட்கள் கொண்டாடப்பெறும். சைவர் மாநாடும், சைவ மங்கையர் மாநாடும், சைவ இளைஞர் மாநாடும் இவ் விழாவில் அங்கங்களாக அமையும். இவ்விழாவில், சாத்திர சமய நூல்கள் சில, சமாஜ வெளியீடுகளாக வெளியிடப்பெறும். இவையன்றி, சமாஜ மணிவிழா மலர்

ஒன்று வெளியிடப்படும். தக்க அறிஞர்களின் கட்டுரைகள், சைவ சித்தாந்த நூல்களின் அட்டவணை, சமாஜ வரலாறு, சமாஜத் தொண்டர்களின் வாழ்க்கைக் குறிப்பு, இன்னோரன்ன பிற இம்மணிவிழா மலரில் இடம்பெறும்.

இம்மணிவிழா எந்த மாவட்டத்தில் கொண்டாடுவது என்பது உறுதியாகவில்லை. இடம், சமாஜ அன்பர்களின் அழைப்பைப் பொறுத்தது. மணிவிழா, சிறந்த முறையில் கொண்டாடுவதற்கு சைவப்பெருமக்கள் ஒத்துழைப்புத் தேவை. மணிவிழா மலர் வெளியிடுதல், மாநாடு நடத்துதல், மணிவிழாவையொட்டி நூல் வெளியிடுதல் ஆகிய இவை போன்ற குறிப்பிட்ட ஒரு பணிக்கு நன்கொடை அளித்து சமாஜத்தை ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

மணிவிழா சிறப்புற நடத்த அன்பர்கள் கருத்துக்களும் வரவேற்கப்பெறும்.

சமாஜத்தின் மணிவிழா காலத்திற்கு ஏற்ப சைவத்தின் பெருமையைப் பிரதிபலிக்கும் அளவில் நடத்த சைவப் பெருமக்கள் துணைபுரிவார்களாக.

“ ஞாலம் நின்புகழேமிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே ”

ஜி. எம். முத்துசாமி பிள்ளை,
ஐ. ஏ. எஸ். (ஓய்வு), தலைவர்

கொ. நீ. சிங்காரவேலு.
செயலாளர்

நல். முருகேச முதலியார், பி.ஏ.,
தி. கி. நாராயணசாமி நாயுடு.
துணைத் தலைவர்கள்

மு. நாராயணசாமி,
துணைச் செயலாளர்

சமாஜ வெளியீடுகள்

	ரூ.	பைசா
சைவ சமயச் சொற்பொழிவுகள்	2	00
ஞானியாரடிகள் நினைவுமலர்	1	00
முருகன் மூந்நூல்	0	40
பொன் விழா மலர் 0 50 அறப்பயிற்சிமாலை	0	50
குகார்ச்சனைத் திருமந்திரம்	0	06
சிவஞான சித்தியார் - சிவாக்கிரக யோகிகள் உரையுடன்	0	50
சிவலிங்க வழிபாடு	0	50
திருமயிலையும் பூம்பாவையும்	0	50
சிவஞான போதம்-எளிய உரையுடன் (சிறியது)	0	12
திருவெம்பாவை-உரையுடன் (சிறியது)	0	06
அறுபத்து மூவர்	0	05
நான் நம்புவன சில	0	07
விநாயகர் வழிபாடு	0	20
திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி பொன் விழா வெளியீடு	1	25
கந்தரனுபூதி—யந்திர உரையுடன்	1	25
சிவஞான போதம்—தெளிவுரையுடன்	0	50

பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் நூல்கள்

சிறுநூற்றிரட்டு 1 25 சிவஞான தீபம்	0	50
சைவ சமய சரபம்	2	50
நாலாயிரப் பிரபந்த விசாரம்	1	00
சேந்தன் செந்தமிழ் 1 50 செவியறிவுறூஉ	0	20
பாம்பன் - ஸ்ரீமத் : குமரகுருதாச சுவாமிகள் சரித்திரம்	1	50

தபால்—ரயில் செலவு தனி.

"சித்தாந்தம்"—சிறந்த மாதப் பத்திரிகை

ஆண்டுச் சந்தா ரூ. 3. ஆயுள் சந்தா ரூ. 50.

கிடைக்குமிடம் :—

சைவ சித்தாந்த மகா சமாஜம்,

12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4

முருகன் அச்சகம், சென்னை-14.

பிற செய்திகள்

வாலாஜாபாத் இந்துமத பாடசாலை அப்பா திரு. வா. தி. மாசிலாமணி முதலியார் அவர்கள் இவ்வாண்டு நம் சமாஜத்திற்கு 100 உறுப்பினர்களுக்குமேல் சேர்த்து உதவி யிருக்கிறார்கள். அவர்களுக்கு சமாஜத்தின் நன்றி உரிய தாகுக. இவர்களைப் போன்று பிற சமாஜ உறுப்பினர் களும் தங்கள் கடமைகளில் ஒன்று என சமாஜத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்தால் உறுப்பினர் எண்ணிக்கை பல மடங்குகளாகப் பல்கிச் சிறந்து விளங்கும். அதற்கு உறுப்பினர்கள் ஒல்லும் வகையால் முயலுமாறு வேண்டு கிறோம். —(துணையாசிரியர்)

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையில் 20—3—65 ல் காரைக்காலம்மையார்திருநாள் மிகச் சிறப்பாகக் கொண் டாடப்பட்டது, தமிழ்நாவலர் புலவர் திரு சி. அரசப்ப னார் (கோழியூர்) "அதிமதுரக்கனி" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

உலக சாந்தி ஆசிரமம் தொடக்க விழா

திருவொற்றியூரை அடுத்த நாப்பாளையம் குடதலை ஆற் றின் கரையில் உலக சாந்தி ஆசிரமம் அமைக்கப்பட்டு, அதன் தொடக்கவிழா 5—3—'65 வெள்ளிக்கிழமை மாலை யில் ஆட்சிமொழித் துறைத் தனி அலுவலர் திரு. கீ. இராம லிங்கனார் M.A. அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது.

ஆசிரமத் தலைவர் புலவர் திரு. மு. இராமகிருஷ் ணன் அவர்கள் உலகிலுள்ள அனைவரது நலத்திற்காகவும் பாடுபடுதல், திருக்குறளுக்கெனத் தனிக்கலைக் களஞ்சியம் தொகுத்தல், தமிழ் இலக்கியங்கள், மூலிகைகள் குறித்து ஆராய்தல், தமிழ் இலக்கியங்களில் பயிலும் பொருள்களைக் கொண்ட காட்சிசாலை ஒன்றை அமைத்தல், பழம் ஓலைச் சுவடிகளையும் நூல்களையும் தொகுத்தல் ஆகியவையே ஆசிர மத்தின் முக்கிய குறிக்கோள்களாகும் என்று விளக்கினார் கள். விழாத் தலைவர் திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்து, திருக்குறள்உலகஆட்சியின் சட்ட நூலாக விளங்க வேண்டும் என்றார்கள். திருவேதாந்தம் அவர்கள் சுவாமி தயானந்தர் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். தியாகராயர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ம. இராச மாணிக்கனார் M.A. அவர்கள் ஆசிரமப் பணிகளை விளக் கினார். ஆசிரமச் செயலாளர் தி. த. இராமலிங்கம் M.A., B.O.L., அவர்கள் நன்றி கூற இனிது முடிவுற்றது.

மதிப்புரை

இயற்றமிழ் :—இந்நூலை இயற்றிய ஆசிரியர் திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார் M. A அவர்கள் ஆவர். இதனுள் ஆசிரியர் பல தலைப்புகளுள் சிறந்த கட்டுரைகள் பதினொன்றினை நிரல்பட எழுதியிருக்கின்றார். இந்நூலி லிருந்து ஆசிரியரின் உள்ளப் பாங்கினையும் எவ்வாறு வருங்கால மாணவருலகம் மேன்மையுற வேண்டும் என் பதனையும் தெரிந்துகொள்ளலாம். இக்கட்டுரைகள் யாவும் சங்கத் தமிழ் நூல்கள், தமிழ்த் தோத்திர நூல் களை அடியொற்றி எழுதப்பட்டவை என்பதனை அவை களைப் படிப்போர் தெற்றென உணர்வர். இவைகளுள் "திருமந்திரமும் அறநூல்களும்,' என்னும் கட்டுரையில் ஆசிரியர் திருமூலர்தான் இயற்றிய சாத்திரம் என்றும் தோத்திரமென்றும் கூறத் தக்க நூலுள் எவ்வாறு அறங் களையும் இலக்கியச் சுவையையும் புகட்டியுள்ளார் என் பதை மிக அழகுற எடுத்துக் காட்டுகின்றார். இது போன்றே "சுந்தரரும் ஒன்பான் சுவைகளும்" என்ற கட்டுரையில் தோத்திர நூலில் தமிழிலக்கியச் சுவைகளை விளக்கும் திறம் போற்றற்பாலது. இங்கிதமாலையைப் பற்றிய விளக்கக் கட்டுரையைப் படிப்போர் உடனே இங்கிதமாலையைப் படித்து முடியாதிரார். அத்தகைய தூண்டுகோலாய் அக்கட்டுரை அமைந்துள்ளது. இவை போன்றே பிற கட்டுரைகளும் மிகச் சிறப்புற்றிருக் கின்றன. இருப்பினும் கொல்லிப்பாவை, பெருந்தேவ னார் பாரதம் போன்றவை பலரால் அதிகமாக எழுதி விளக்கப்படாதவை. இந்நூலில் அவைபற்றி நல்ல விளக் கங்கள், சிறப்புகளைக் காணலாம் நடை ஆற்றொழுக்கா யுள்ளது. பொதுவாக யாவரும் சிறப்பாக மாணவரும், கற்றுப் பயன்பெற வேண்டிய நூலாகும். யாவரும் வாங்கிப் படித்துப் பயன்பெறுவார்களாக.

நூல் வேண்டுவோர், பூ. ஆலாலசுந்தரனார் M.A.
"சிவனகம்" S/19, ஆசிரியர் குடியிருப்பு,
தாம்பரம், என்ற முகவரிக்கு எழுதலாம்.

148 பக்கங்களைக்கொண்டது விலை ரூ. 2–50

(அம்பை சங்கரன்)

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1. by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.